## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் – திறன் மேம்பாட்டு பயிற்சி – செயல்திட்டம் 2015–2016 –ஆம் ஆண்டிற்கு முன்மொழிவு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – செயல்படுத்துவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி.2)துறை

அரசாணை (ப) எண். 23

நாள் 29.01.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047 தை
திங்கள் 15 ஆம் நாள்

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி–2)துறை, நாள் 27.8.2015.
2. மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண்.டி1/017034/2015, நாள்.12.11.2015.

*********

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2015–2016–ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் தாட்கோ திட்டங்களை செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தாட்கோ மேலாண்மை இயக்குநர் 2015–2016 –ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் ஆரம்ப நிலை பயிற்சிகளான கட்டுமான தொழில் சார்ந்த பயிற்சிகள், மைய அரசு நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், கணினி பயிற்சிகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அவை சார்ந்த பயிற்சிகள் மேலும் இலகுரக வாகன ஓட்டுனர் பயிற்சி அளித்தல்(ஓட்டுநர் உரிமத்துடன்) பெறுதல் போன்ற பயிற்சிகள் 6000 ஆதிதிராவிடர் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு அளிப்பதற்கென மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.13.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து மேற்படி நிதியின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்திட முன்மொழிவும், வழிகாட்டு நெறிமுறைகளையும் தயாரித்து அரசின் ஆணை கோரி செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:-

(அ) திறன் மேம்பாட்டு பயிற்சி செயல்திட்டம் 2015–2016

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி காலம் | செயல் இலக்கு எண்ணிக்கை | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| I | தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி (ஆயத்த ஆடை வடிவமைப்புப் பயிற்சி(ATDC) பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி (CIPET) காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி (CFTI) & (FDDI) திரைப்படத்துறை சார்ந்த பயிற்சி (NFDC) | 3 மாதம் முதல் 12 மாதம் வரை | 1200 | 275.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| II | ஆரம்ப நிலை செயல் திறன் பயிற்சி | | | |
| 1. | ஜே.சி.பி. இயக்குபவர் | 03 | 200 | 40.00 |
| 2. | பொக்லைன் இயக்குபவர் | 03 | | |
| 3. | போர்க் லிப்ட் இயக்குபவர் | 03 | | |
| 4. | மின் பணியாளர் | 12 | | |
| 5. | ஏ.சி. மெக்கானிக் | 12 | 400 | 90.00 |
| 6. | டீசல் மெக்கானிக் | 12 | | |
| 7. | மோட்டர் மெக்கானிக் பிட்டர் | 12 | | |
| 8. | மோட்டார் மெக்கானிக் | 12 | 100 | 15.00 |
| 9. | அழகு கலை பயிற்சி (பெண்களுக்கு மட்டும்) | 03 | | |
| 10. | தையல் கலை பயிற்சி | 12 | 100 | 18.00 |
| 11. | சுருக்கெழுத்து பயிற்சி | 06 | 50 | 4.00 |
| 12. | ஓட்டுநர் பயிற்சி–LMV | 03 | 100 | 12.00 |
| 13. | ஓட்டுநர் பயிற்சி–LMV | 03 | 50 | 6.00 |
| 14. | பிளம்பர் பயிற்சி | 03 | 1000 | 185.00 |
| | கூடுதல் | | | |
| III | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை சார்ந்த பயிற்சிகள் | | 300 | 60.00 |
| | உணவு தயாரித்தல் பயிற்சி | 12 | 300 | 60.00 |
| | உணவு பரிமாறுதல் பயிற்சி | 12 | 400 | 40.00 |
| | சில்லரை மேலாண்மை பயிற்சி | 03 | 100 | 15.00 |
| | Home Care Nursing | 10 | 1100 | 175.00 |
| | கூடுதல் | | | |
| IV | **கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள்** | | | |
| | Tally | 03 | | |
| | CAD/CAM (Auto Desk Certification) | 03 | | |
| | Hardware and Net working | 03 | | |
| | Multimedia and Animation | 06 | | |
| | BPO/Call Centre-Voice/Non Voice | 03 | | |
| | Software Testing | 03 | 2700 | 715.00 |
| | Web Designing | 06 | | |
| | IT Finishing School – Tech | 180 hrs | | |
| | IT Finishing School – Non Tech | 180 hrs | | |
| | JAVA | 03 | | |
| | C, C++, etc., | 03 | 6000 | 1350.00 |
| | மொத்தம் | | | |

(ஆ) திறன் மேம்பாட்டு பயிற்சி 2015–2016 –ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்:-

**I தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி: (ரூ.275 இலட்சம்)**

சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் தேசிய நிறுவனங்களான ஆடை தயாரித்தல் மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் (ATDC) மற்றும் தேசிய ஆடை அலங்காரத் தொழில்நுட்ப நிலையம் (NIFT), மத்திய காலணி தயாரித்தல் பயிற்சி நிறுவனம்(CFTI), காலணி வடிவமைத்தல் வளர்ச்சி நிறுவனம்(FDDI) மற்றும் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம்(NFDC) போன்ற மத்திய அரசு நிறுவனங்களின் மூலம் முறையே ஆயத்த ஆடை வடிவமைப்பு, பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி போன்ற தோல் பொருட்கள் தயாரித்தல், திரைப்படம் சார்ந்த விசுவல் மீடியா, ஒலிப்பதிவு, சினிமாடோகிராபி ஆகிய பயிற்சிகள் 1200 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.275.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும். மத்திய அரசு சார் பயிற்சி நிறுவனங்களிடம் பிரேரணை கோரி பெறப்படும் அப்பிரேரணை உயர் அலுவலர்கள் அடங்கிய குழு பரிசீலித்து தகுதியான நிறுவனங்கள் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் குறைந்தபட்சம் 75 விழுக்காடு வேலை வாய்ப்பு பெற்றுத்தர வேண்டும், என்ற நிபந்தனையுடன் பயிற்சி அளிக்கப்படும்.

II. ஆரம்ப நிலை செயல்திறன் பயிற்சிகள்:(ரூ.185 இலட்சம்)

ஆரம்ப நிலை செயல்திறன் பயிற்சிகளான மின் பணியாளர், ஏசி மெக்கானிக், டீசல் மெக்கானிக், பிட்டர், மோட்டார் மெக்கானிக், ஜே.சி.பி. பொக்லைன், போர்க் லிப்ட் இயக்குபவர்கள் போன்ற பயிற்சிகளுக்கு உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் வேலைவாய்ப்பு உள்ளதால் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

கனரக வாகன ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் உள்ளதால் ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ மாணவ மாணவியர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி சாலை போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport) அசோக் லைலேண்ட் (Ashok Leyland) டி.வி.எஸ்(TVS) மூலம் அளிக்கப்படும்.

அழகுக் கலை, தையல் கலை போன்ற பயிற்சி பெற்றவர்களுக்கு சுய தொழில் மற்றும் நிறுவனங்ளில் வேலை வாய்ப்பு பெற வாய்ப்பு உள்ளதால், இத்தகைய பயிற்சிகள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படும்.

மேற்காணும் பயிற்சிகள் 1000 ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவ இளைஞர்களுக்கு ரூ.185.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

III. விருந்தோம்பல் மற்றும் சில்லரை மேலாண்மை சார்ந்த பயிற்சி: (ரூ.175 இலட்சம்)

சில்லரை மேலாண்மை பயிற்சிபெற்று தனியார் அங்காடிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ளவும், உணவு தயாரித்தல் மற்றும் உணவு பரிமாறுதல் போன்ற பயிற்சிகள் தமிழக அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்களில் நட்சத்திர அந்தஸ்த்து பெற்ற உணவு விடுதிகளில், உள் நிறுவனப் பயிற்சி (In Plant Training) –உடன் வழங்கினால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள முன்னோடி உணவு விடுதிகளில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால் 110 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.175 இலட்சம் செலவில் அளிக்கப்படும். உணவு தயாரித்தல் மற்றும் உணவு பரிமாறுதல் பயிற்சிக்கு அரசு சார்ந்த துவாக்குடி நிறுவனம் மூலம் அளிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

IV.கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப பயிற்சி: (ரூ.715 இலட்சம்)

ஆதிதிராவிடர் மாணவ மாணவிகளுக்கு கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் துறையில் வேலை வாய்ப்பு பெற கணினி துறையில் பல்வேறு பயிற்சிகளான CAD/CAM, Tally, Hardware Networking, Multimedia & Animation, Web Designing, BPO/Call Centre, IT – Finishing School – Technical, IT- Finishing School – Non Technical, Software Testing, Java போன்ற பயிற்சிகள் 2700 ஆதிதிராவிடர் ரூ.715 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

3. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படவுள்ள பயிற்சிகளுக்கு பயிற்சி நிறுவனங்கள் குறைந்தது 75 விழுக்காடு வேலைவாய்ப்பு பெற்றுத்தர வேண்டும். தனியார் பயிற்சி நிறுவனங்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் பயிற்சி திட்டங்களிலும்/பயிற்சிகளுக்காக ஒதுக்கீடு செய்த தொகையிலும் சிற்சில மாற்றங்கள் செய்து திட்டங்களை செயல்படுத்திட பயிற்சிகள் அளிக்க மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கியும் மற்றும் தாட்கோவால் நடைமுறைப்படுத்தப்படும் பயிற்சி/திட்டங்களுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை தாட்கோ நிர்ணயித்து செயல்படுத்தவும் தனியார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 (Tamil Nadu Transparancy in Tender Act 1998 & Rules 2000) பின்பற்றப்பட வேண்டும்.

4. 2015 –2016 –ஆம் ஆண்டிற்கான தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கிடவும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் அளித்துள்ள செயல்திட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. மேலும் மேலே படிக்கப்பட்ட அரசாணையின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி பயனாளிகள் தெரிவு மற்றும் ஒதுக்கீடு பின்பற்றுமாறும், ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Centralised Tender) மூலம் பயிற்சி நிறுவனங்களை தெரிவு செய்யுமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலும் பயிற்சி முடித்த பின்னர் பயிற்சியின் பயன்பாடு குறித்த விவரமான அறிக்கையை பயனாளிகளிடம் பெற்று அனுப்புமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்.

பெறுநர்:
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை– 18
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 5
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்:
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
அனைத்து தாட்கோ மாவட்ட மேலாளர்கள் (மேலாண்மை இயக்குநர்) தாட்கோ வழியாக)
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கமபா/அநமு–1)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி ஆணை.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.